# கோபிசெட்டிபாளையம் நகராட்சி

## பேரறிஞர் அண்ணா அவர்களின்

## பிறந்த நாள் நூற்றாண்டு விழா

## (1909-2009)

தோற்றம் - 15-9-1909

மறைவு - 3-2-1969



ஆயிரமாயிரம் திறமைமிகு அலுவலர்கள் பணியாற்றினால் மட்டும் போதாது. ஆட்சி உண்மையிலேயே செம்மையானதாக அமைந்திட வேண்டுமெனில் வயலில், தொழிற்சாலையில், அங்காடியில், பணிபுரிந்திடும் அனைவரும் நாம் என்னும் ஒற்றுமை உணர்வுடன் செயல்பட வேண்டும் என்னும் உணர்வை போற்றி நின்ற பேரறிஞர், உன்னத மனிதரே அண்ணா அவர்கள்.

### பிறப்பும்,கல்வியும்

1909 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15–ம் நாள் காஞ்சி மாநகரில் நெசவாளர் குடும்பத்தில் நடராசன்–பங்காரு அம்மையார் ஆகியோரின் அரும்பெரும் தவப்புதல்வராக தோன்றின் புகழொடு தோன்றுக என்னும் வள்ளுவரின் வாக்கிற்கிணங்க தோன்றியவரே நாடு போற்றும் நல்லறிஞர் அண்ணா அவர்கள்.

பள்ளிப் பருவம் எய்தியதும் 1928–ம் ஆண்டு இடைநிலை வகுப்பில் சேர்ந்தார். பின் 1930–ம் ஆண்டு பி.ஏ. பொருளியல் பேரவைத் தலைவராகவும் பொறுப்பேற்று சிறப்பாக பணியாற்றினார்.

### திருமணம்

முதுகலை வகுப்பு படிக்கும் போது அதாவது 1930–ல் அண்ணாதுரைக்கும் இராணி அம்மையார் என்னும் நற்குண நங்கைக்கும் திருமணம் நடந்தது.

## பொதுநல நாட்டமும், ஏற்ற பணிகளும்

பொதுநலப் பணியில் அவருடைய நாட்டம் சென்றதெனினும் அவருடைய சிற்றன்னையார் ராசாமணி அவர்களின் விருப்பத்திற்கேற்ப சென்னையில் கோவிந்தப்ப நாய்க்கன் தெருவில் உள்ள நடுநிலைப் பள்ளியில் ஆசிரியர் பணியை ஏற்று மாணவர்கள் மனம் மகிழத்தக்க வகையில் அவர்களுக்கு கற்பித்தார்.

1935–ல் வெளிவந்த பாலபாரதி என்னும் வார ஏடு, 1937–ல் வெளிவந்த நவயுகம் என்னும் வார இதழுக்கும் 1938–ல் வெளிவந்த விடுதலை, குடியரசு ஆகிய இதழ்களின் துணை ஆசிரியராகவும், 1953–ல் வெளியான நம்நாடு நாளேடு, 1962–ல் தன்னாட்சி என்ற ஆங்கில வார ஏட்டிற்கு ஆசிரியராகவும் பணியாற்றினார். மேலும் 1942–ல் காஞ்சிபுரத்தில் திராவிட நாடு மற்றும் 1963–ல் காஞ்சி வார இதழ்களையும் தொடங்கினார்.

## அரசுப்பொறுப்பு

1949–ம் ஆண்டு செப்டம்பர் 17–ம் நாள் பிரிந்து சென்று, திராவிட முன்னேற்றக்கழகம் என்ற புதியதோர் அமைப்பை தொடங்கி அக்கட்சியின் பொதுச் செயலாளராக பொறுப்பேற்றார். பின்பு 1967–ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெரும்பான்மை பெற்று கழகம் ஆட்சியை கைப்பற்றி மார்ச் 6–ம் நாள் அறிஞர் அண்ணா தமிழக முதலமைச்சராகப் பதவியேற்றார்.

அவர்தம் குறுகிய ஆட்சிக்காலத்திலேயே சுயமரியாதை திருமணச் சட்டம், இரு மொழித்திட்டம் ஆகியவற்றையும் சட்டமாக்கினார். அவரது சீரிய முயற்சியால் இராண்டாவது உலகத் தமிழ் மாநாடு 1968– ஜனவரியில் சென்னையில் நடைபெற்றது.

## தீண்டாமை ஒழிப்பு

ஒரு கொள்கையின் நிலைபேறு அக்கொள்கை சமுதாயத்தில் நிலைபெற்றிருக்கும் தன்மை பொறுத்தமையும் அவ்வாறு நிலை பெற்ற சாதியமைப்பு நீக்கப்பட்டால்தான் சமுதாயத்தில் உயர்வு, தாழ்வு நீங்கும் என்று கூறி சாதி ஒழிப்பில் வன்மை காட்டினார்.

## தமிழ்நாடு பெயர் மாற்றம்

1968–ம் ஆண்டு டிசம்பர் 1–ம் நாள் கலைவாணர் அரங்கில் நடைபெற்ற சிறப்புக்கூட்டத்தில் கலந்து கொண்டு மெட்ராஸ் ஸ்டேட் என்னும் பெயரை மாற்றி தமிழ்நாடு என்று அழகிய தமிழ் பெயரை சூட்டியது அண்ணாவுக்கு மன நிறைவளித்த செயலாகும்.

## அண்ணா மறைவு

1968–ல் அமெரிக்கா சென்று சிகிச்சை பெற்று நலமுடன் திரும்பிய அண்ணா அவர்களுக்கு 1969 ஜனவரி திங்களில் மீண்டும் உடல் நலம் குன்றியது. அடையாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. இருப்பினும் பிப்ரவரி 2–ம் நாள் இரவு 12.22 மணிக்கு அண்ணா அவர்கள் மறைந்தார்.

## நாம் பின்பற்ற வேண்டியவைகள்

அச்சம் தளர்ந்திடுக நவநிதியம் தந்திடினும் நந்திக்கிடந்திட இசையாதீர். வாய்மைகளைச் சாத்திடும் வன்மை பெற்றிடுக. அதற்காக நெருப்பாற்றில் நீந்திடவும் துணிந்திடுக என்னும் அண்ணாவின் வழி நின்று யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் நம் தமிழ் மரபினை போற்றி முற்போக்கு நாடுகளுக்கு இணையாக மாற்றி அமைத்திடுவோமாக.




அறிஞர் அண்ணா நினைவு தபால் தலை



அறிஞர் அண்ணா யேல் பல்கலை கழகத்தில்



அண்ணா நினைவிடம் – சென்னை

## கோபிசெட்டிபாளையம் நகராட்சி

பேரறிஞர் அண்ணா அவர்களின் திரு உருவப் படத்திற்கு
நகர் மன்றத் தலைவர் திருமதி. எம். ரேவதி தேவி அவர்கள், நகராட்சி ஆணையர்,
அலுவலர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு
நகராட்சி பேருந்து நிலையத்தில் துப்புரவு இயக்கம் செயல் படுத்தப்பட்டது.
இதில் நகர் மன்றத் தலைவர் திருமதி. எம். ரேவதி தேவி அவர்கள், நகராட்சி ஆணையர்,
அலுவலர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு
நகராட்சி எரிவாயு மயானத்தில் மரக் கன்று நடும் நிகழ்ச்சி நடைபெற்றது.
இதில் நகர் மன்றத் தலைவர் திருமதி. எம். ரேவதி தேவி அவர்கள், நகராட்சி ஆணையர்,
அலுவலர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நகராட்சி பள்ளி மாணவ மாணவியர்களின் சொற்பொழிவும் பரிசு வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இதில் நகர் மன்றத் தலைவர் திருமதி. எம். ரேவதி தேவி அவர்கள், நகராட்சி ஆணையர், அலுவலர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

